சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:25.03.2025

DW4: ஜெயந்திபிரியா க/பெ– வெங்கடேஸ்வரன்

(3, 4 , 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு முன்வரவில்லை)

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் பிறந்தது விருதுநகர். சொந்த ஊர் வடமலைக்குறிச்சி. நான் படித்தது வடமலைக்குறிச்சி அரசு பள்ளி. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் தான் சொன்னேன். எனது தரப்பில் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு நான் எனது வழக்கறிஞரை எப்போது சந்தித்தேன் என்றால் நான் எனது தாயாருடன் சென்று சந்தித்தேன். அசல் வழக்கில் எனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. கந்தசுப்பையா என்பவருக்கும், எனது தாயாருக்கும் என்ன உறவு என்றால் என் தாயாரை என் தகப்பனார் மீண்டும் திருமணம் செய்து கொண்டார். 8ம் பிரதிவாதி பாக்கியலட்சுமி எனது தகப்பனாரின் முதல் மனைவி. அவரை என் தகப்பனார் விவாகரத்து செய்த விபரம் அவர்கள் இருவரும் சொல்லி தெரியும். அதற்கான ஆவணங்களை எனது தகப்பனார் என்னிடம் காண்பித்தார். எனது தரப்பில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனது தாயாரும், தகப்பனாரும் முறைப்படி திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதியை எனது தகப்பனார் விவாகரத்து செய்யவில்லை என்றால் சரியல்ல, எங்கள் ஊர்முறைப்படி 8ம் பிரதிவாதியை எனது தகப்பனார் விவாகரத்து செய்து விட்டார். 8ம் பிரதிவாதி கந்தசுப்பையாவின் மீது

அருப்புக்கோட்டை நடுவர் நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியும். கந்தசுப்பையா கடந்த டிசம்பர், 2015 ல் இறந்துவிட்டார். எனது தாயார் சாந்தி இந்த வழக்கில் என்ன சாட்சியம் அளித்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். எனது தாயாரும் அவருக்கும், கந்தசுப்பையாவிற்கும் முறைப்படி திருமணம் நடைபெற்றதாக அவரது சாட்சியத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் கந்தசுப்பையா அவர்களை சட்டப்படி திருமணம் முடிக்கவில்லை என்பதாலும், 8 ம் பிரதிவாதி பாக்கியலட்சுமியை சட்டப்படி விவாகரத்து செய்யவில்லை என்பதாலும் எங்களது தாயாரின் திருமணம் செல்லத்தக்கதல்ல என்பதாலும் கந்தசுப்பையா என்பவருக்கு நாங்கள் வாரிசுகளாக மாட்டோம் என்றும் சொன்னாலும் அதனால் கந்தசுப்பையாவிற்குரிய தபசில் சொத்தின் மீதான பங்குரிமையில் எங்களுக்கு எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் சட்டத்திற்கு புறம்பாக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.